**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 60/2024**

**வா.சா.1 – சந்திரன்**

**24–03–2026 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியும். கோவில் சொத்து வீடு சேர்த்து மொத்தம் எவ்வளவு ஏக்கர் என்றால் 1 ஏக்கர் 10 செண்ட். அதில் தான் நானும் எனது சகோதர சகோதரிகளும் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். அந்த பூமி ஆதியில் எனது தாத்தா ராமனுக்கு சொந்தமானது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு காளியம்மாள், கொண்டாத்தாள் என்ற மகள்களும், காளியப்பன், ராஜேந்திரன் என்ற மகன்களும் வரிசுகள். அவர்கள் நால்வருக்கும் திருமணம் நடந்து குடும்பத்துடன் உள்ளார்கள் என்றால் சரிதான். கொண்டாத்தாள், ராஜேந்திரனை தவிர மற்றவர்கள் இறந்துவிட்டார்கள்.

2. ஆதியில் இந்த கோவிலை எனது தாத்தா தான் வைத்தார் என்றால் அது விவசாய பூமி, கோவிலை 35 ஆண்டுகளுக்கு முன் நான் தான் வைத்தேன். எந்த ஆண்டு கோவில் வைக்கப்பட்டது என்று தாவாவிலோ, பிரமாணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். கோவில் வைக்கும் சமயத்தில் நான் அந்த தோட்டத்தில் தான் விவசாயம் செய்து வந்தேன். கோவில் வைத்ததற்கு பின்னிட்டு நான் கணக்கு பாத்ததாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாதாரன நோட்டில் தான் எழுதி வைப்பது வழக்கம்.

3. நான் தாவாவில் 30 லட்சம் செலவு செய்ததாக சொல்லும் பணம் எனது சகோதர சகோதரிகளும், பொது மக்களும் கொடுத்த பணம் என்றால் பொது மக்கள் கொடுத்தார்கள் மீதி பணம் பைனான்சில் வாங்கினேன். பைனான்சில்

வாங்கிய விபரத்தை தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கோவில் உள்ள சொத்தும் மீதி சொத்தும் பிரிக்கப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அந்த பிரிபடாத சொத்திற்கு சந்திரன், மீனாட்சி, ரங்கசாமி, விஜயா வாரிசுகள். 2022ம் ஆண்டு எனக்கு உடல் நிலை சரியில்லாததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் 35 ஆண்டுகளாக கோவில் நடத்தியதற்காக கணக்கு ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4. நான் 6ம் வகுப்பு படித்துள்ளேன். 1ம் பிரதிவாதியான எனது தம்பி 3ம் வகுப்பு வரை படித்துள்ளார். 1ம் பிரதிவாதிக்கு சரியாக எழுதப்படிக்க தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். எனக்கு கோபியில் தனிப்பட்ட முறையில் சொத்து உள்ளது என்றால் இல்லை. கோவிலில் வந்த வருமானத்தை கொண்டு யாருக்கும் தெரியாமல் கோபியில் சொத்து வாங்கியுள்ளேன் என்றும், அதை கேட்ட போது தான் தாவா கோவிலை தானாகவே பிரதிவாதிகள் வசம் ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. கோபியில் பொதுமக்கள் அனைவரும் சேர்ந்து சர்வதேவா சேவா அறக்கட்டளை ஆரம்பித்து என்னை தலைவராக போட்டுள்ளார்கள்.

5. தாவா கோவிலில் யார் என்னை தலைமை பூசாரியாக நியமித்தார்கள் என்றால் நான் கோவில் வைத்ததில் இருந்து நான் தான் பூஜை செய்து வருகிறேன் அதேபோல் எனது தம்பியும் வந்து பூஜை செய்வார். அதற்கு உண்டான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். பொதுவில் உள்ள கோவிலில் நான் மட்டும் உரிமை கோர இயலாது என்றால் அனைவருக்கும் உரிமை உள்ளது. ஆனால் தலைமை பூசாரி நான் தான். என்னை கோவிலுக்குள் எனது தம்பி ரங்கசாமி தற்போது பூஜை பன்னவும், உள்ளே விடாமலும் தடுக்கிறார்.

6. நான் காவல் நிலையத்தில் எழுதி கொடுக்கப்பட்டதாக தாக்கல் செய்துள்ள ஆவணம் மிரட்டி வாங்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. கோவிலில் அனைவருக்கும் உரிமை உள்ளது என்றும், எந்த ஒரு நேரத்திலும் நான் உள்ளே வருவதை பிரதிவாதிகள் தடுக்கவில்லை என்றால் சரியல்ல. தடுப்பதால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். உடல் நிலை சரியில்லாமல் மருத்துவமனை சென்றபோது கோவில் பொறுப்பை எனது தம்பியிடம் கொடுத்தாக சொல்லும் நான் அதற்கு எழுத்து முலமான ஆவணம் வைத்துள்ளேனா என்றால் இல்லை.

(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது. )

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.24 16:02:09 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.